
WORLD TAMIL CHESS FEDERATION
WTCF
உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை
5th WTCF CEYLON
RAPID CHESS OPEN
TRINCOMALEE 2026
வல்லாட்ட
சிறப்புமலர்
www.worldtamilchess.com
22.08.2026
admin@worldtamilchess.com


WTCF
CHALLENGE
CUP

உள்ளடக்கம்

பக்கம்

2.	உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் ஸ்தாபகர் கந்தையா சிங்கம் அவர்களின் செய்தி
3.	உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் தலைவர் அவர்களது வாழ்த்துரை
4 - 5.	வாழ்த்துச் செய்தி - மாநகர முதல்வர்
6.	ORGANIZING COMMITTEE - 2026
7.	WTCF DISTRICT COORDINATORS - 2026
08	WTCF CENTRAL COMMITTEE
09.	ARBITERS - 2026
10 - 11.	2025 WTCF- Ceylon Rapid Open Vavuniya Ranking
12 - 15.	உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் எழுச்சியும் வளர்ச்சியும்
16.	WTCF CEYLON RAPID OPEN - 2025 VAVUNIYA PHOTOS
17.	2026 WTCF London Open Photos
18.	வல்லாட்டம் வளர்க்கும் திறன்கள் மற்றும் அதன் சிறப்புகள்

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் ஸ்தாபகர் கந்தையா சிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை வடக்கு கிழக்கு ரீதியாக நடத்தும் 5வது WTCF Ceylon Rapid Chess Open – 2026 போட்டி, 22.08.2026 ஆம் ஆண்டு திருகோணமலையில் நடைபெறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையினால் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படும் முதல் சதுரங்கப் போட்டியாக இந்நிகழ்வு அமைந்திருப்பது எமக்குப் பெருமைக்குரிய ஒரு மைல்கல்லாகும். அறிவாற்றல், சிந்தனைத் திறன், ஒழுக்கம் மற்றும் பொறுமையை வளர்க்கும் சதுரங்க விளையாட்டை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் மேலும் பரப்புவதற்கான அரிய வாய்ப்பாக இப்போட்டி அமையும் என்பதில் நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் சதுரங்க விளையாட்டிற்கான விழிப்புணர்வை உருவாக்கி, புதிய திறமையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை ஊக்குவிக்கும் முயற்சியில் இந்நிகழ்வு குறிப்பிடத்தக்க பங்காற்றும் என நம்புகின்றோம்.

இப்போட்டி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய திருகோணமலை மாநகர சபையின் நகரப் பிதா திரு. கந்தசாமி செல்வராசா அவர்களுக்கும், மாநகர சபை உறுப்பினர்களுக்கும், அலுவலர்களுக்கும் உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல், இப்போட்டியை சிறப்பாக நடத்த எம்முடன் தோழமையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய மாவட்ட அமைப்பாளர்கள், போட்டி ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள், நடுவர்கள், தன்னார்வத் தொண்டர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் அனைத்து வீரர்களும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி, விளையாட்டு ஒழுக்கத்துடனும் நட்புணர்வுடனும் போட்டியிட்டு சிறந்த வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன்.

அன்புடன்

கந்தையா சிங்கம்
WTCF Founder

உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் தலைவர் அவர்களது வாழ்த்துரை



ஆவணி 22 ஆம் தேதி ஐந்தாவது தடவையாக மீண்டும் எமது தாய் திருநாட்டில் வரலாற்றுப் பெருமை கொண்ட திருகோணமலை மாநகரத்தில் சதுரங்கப் போட்டியை நடத்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகத் தமிழர் சதுரங்க பேரவையின் தலைவராக எம் தலைமுறையினர் எங்கு போட்டியிட்டாலும் அவர்களை ஊக்குவிப்பதும், சிறந்த தமிழ் சமுதாயத்தினரை இப் போட்டிகளில் பங்கு கொள்ள வைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்குவதே WTCF தலைவராக எனது முக்கிய குறிக்கோள்.

இந்த ஸ்தாபனத்தை உருவாக்குவதில் இருந்து இன்று வரை உலக புலம் பெயர்ந்த தமிழர்களையும் தாய் திருநாட்டு தமிழர்களையும் இந்த போட்டி கிழக்கு கிழங்கையில் நடத்தவும் அயராது உழைத்த ஸ்தாபகர் திரு கந்தையா சிங்கம் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்

மிகவும் தொன்மையான தொல்காப்பியர் காலத்தில் வல்லாட்டம் என்று அழைக்கப்பட்ட இந்த விளையாட்டு, இன்று சதுரங்கம் என அழைக்கப்படுகிறது. உலகத்தமிழர்களை இப் போட்டிகள் மூலம் ஒருங்கிணைத்து சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே எனது குறிக்கோள். தொன்மை மிகு விளையாட்டான வல்லாட்டப் போட்டி திருகோணமலை மாநகரில் வருகிற 22ஆம் தேதி ஆகஸ்ட் மாதம் சிறப்பாக நடைபெற மனமார்ந்த வாழ்த்துக்கள்.

- ரகுராஜ் தர்மரத்தினம்
தலைவர் (WTCF)

வாழ்த்துச் செய்தி
மாநகர முதல்வர் (திருகோணமலை)



அறிவின் ஆழத்தையும், சிந்தனையின் கூர்மையையும், ஒழுக்கத்தின் உயர்வையும் பிரதிபலிக்கும் சதுரங்க விளையாட்டை மையமாகக் கொண்டு உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை ஏற்பாடு செய்துள்ள இச்சிறப்புமிக்க போட்டி, திருகோணமலை மாநகர சபை எல்லைக்குட்பட்ட உள்ளரங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறுவது எனக்கு மட்டுமல்லாது, திருகோணமலை மாநகர சபைக்கும் பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

சதுரங்கம் என்பது வெற்றிக்காக காய்களை நகர்த்தும் ஒரு சாதாரண விளையாட்டு அல்ல அது மனிதனின் அறிவாற்றல், பகுத்தறிவு, பொறுமை, ஒழுக்கம், தொலைநோக்குப் பார்வை, திட்டமிடும் திறன் மற்றும் சவால்களை நிதானத்துடன் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்க்கும் உலகப் புகழ்பெற்ற அறிவுசார் விளையாட்டாகும். வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளிலும் சிறந்த முடிவுகளை எடுக்கும் ஆற்றலை உருவாக்குவதில் சதுரங்கம் வகிக்கும் பங்கு அளப்பரியது.

இன்றைய இளம் தலைமுறையினரிடையே சதுரங்கத்தின் மீதான ஆர்வத்தை வளர்த்தெடுத்து, அவர்களின் அறிவுத்திறனையும் ஆளுமைத்திறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறான போட்டிகள்

ஏற்பாடு செய்யப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க முயற்சியாகும். இத்தகைய நிகழ்வுகள் விளையாட்டை மட்டுமன்றி, ஒற்றுமை, நல்லிணக்கம், பரஸ்பர மரியாதை மற்றும் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையையும் வலுப்படுத்துகின்றன.

இப்போட்டியில் பங்கேற்கும் அனைத்து வீரர், வீராங்கனைகளுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றி பெறுவோர் பாராட்டுக்குரியவர்கள் அதேவேளை ஆர்வத்துடனும் ஒழுக்கத்துடனும் பங்கேற்கும் ஒவ்வொரு போட்டியாளரும் பாராட்டிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களே. இந்தப் போட்டி அவர்களின் எதிர்கால சாதனைகளுக்கு வலுவான அடித்தளமாக அமைய என் மனமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்நிகழ்வை சிறப்பாகத் திட்டமிட்டு வெற்றிகரமாக ஏற்பாடு செய்துள்ள உலகத் தமிழர் சதுரங்கப் பேரவைக்கும், அனுசரணையாளர்களுக்கும், நடுவர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நிறுவனங்களுக்கும் மற்றும் தனிநபர்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போட்டி அறிவையும், விளையாட்டையும், தமிழர் ஒற்றுமையையும் உலக அரங்கில் மேலும் உயர்த்தும் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்து, பல தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த சதுரங்க வீரர்களை உருவாக்கும் ஊக்கமளிக்கும் தளமாக விளங்கிட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

க. செல்வராசா (சுப்ரா)
முதல்வர்
திருகோணமலை மாநகர சபை

ORGANIZING COMMITTEE - 2026



Kandiah Singam



Balasingam Mayuran



Ratnam Sabhananthan



Jesuraja Jeramy



Shakeer Ahamad



Joseph Dilukshan



Kanthasamy Aathithan



Maragathacumar Balakumar



Subramaniam Nirojan



Balenthralingam Vibushithan

WTCF DISTRICT COORDINATORS - 2026



Ratnam Sabhananthan
Vavuniya



N. Nantharuban
Jaffna



Thirunavatkarasu Sivaruban
Kilinochch



Jesuraja Jeramy
Mannar



Subramaniam Sujanthan
Mullaithivu



Kannan Harishanth
Trincomalee



Kunaseelan Prathapan
Batticoala



Shakeer Ahamad
Ampaarai

WTCF CENTRAL COMMITTEE



Kandiah Singam
Switzerland



Dharmaratnam Raguraj
United Kingdom



Anton Amarapala
Norway



Vijayaratnam Vijitharan
United Kingdom



Niranjan Yogeswaran
United Kingdom



Rajan Sagathevan
Switzerland



Santhirabalan Nirmalarajah
Singapore



Saimaruhan
United Kingdom



Mohanagandhirasa Kajan
Sri Lanka



Elanganathan Kuganathan
United Kingdom



Ananthy vijayarajah
United Kingdom

ARBITERS - 2026



Thirunavatkarasu
Sivaruban
Chief Arbiter



Kanthasamy
Aathithan
Arbiter



Srirameshkumar
Anujan
Arbiter



Shakeer
Ahamad
Arbiter



Kannan
Harishanth
Arbiter



Vivegananthan
Vipulanth
Arbiter



Subramaniam
Nirojan
Computer Arbiter



Maragathacumar
Balakumar
Computer Arbiter

2025 WTCF
CEYLON RAPID OPEN
VAVUNIYA RANKING

OPEN

1	Abilash Thavendran	Jaffna (Champion)
2	Selvakumar Thangarajah	Jaffna
3	Anparasan Tharmenthira	Jaffna
5	Vithyasagar Kumukkesan	Vavuniya (Merit)
6	Kajenthiran Theiventhiram	Vavuniya
8	Pasupathan Tharmalingam	Jaffna (Merit)
9	Abishanth Vijayakumar	Mullaitivu (Merit)
10	Rajina Kanagasooriyar *(Female)*	Kilinochchi (Merit)

UNDER 11 BOYS

1	Divikesh Nanthasivam	Amparai
2	Sipisan Nimalan	Kilinochchi
3	Shypravin Sasimaran	Jaffna

UNDER 11 GIRLS

1	Yasvika Prasanna *(Female)*	Jaffna
2	Asmiga Janagan *(Female)*	Jaffna
3	Priththika Prasanna *(Female)*	Jaffna

UNDER 13 BOYS

1	Ashwin Subhananthan	Vavuniya
2	Thanikeasan Soruban	Jaffna
3	Abhiseck Srinivasan	Vavuniya

UNDER 13 GIRLS

1	Kopitha Thevalingam *(Female)*	Kilinochchi
2	Sharniya Thàrmaseelan *(Female)*	Mullaitivu
3	Puvanisha Jeevananthan *(Female)*	Vavuniya

UNDER 15 BOYS

1	Janukshan Brahalathanan	Jaffna
2	Karthik Ravishankar	Jaffna
3	Keerthikan Thayanandarajan	Jaffna

UNDER 15 GIRLS

1	Nilaxshiya Nirmalananthan*(Female)*	Batticaloa
2	Arunika Amuthan*(Female)*	Vavuniya
3	Kishobi Karunanithy*(Female)*	Vavuniya

BEST WOMEN

Nilaxshiya Nirmalananthan*(Female)*	Batticaloa

BEST EASTEN PLAYER

Nilaxshiya Nirmalananthan*(Female)*	Batticaloa



உலகத் தமிழர் சதுரங்கப் பேரவையின் (WTCF) எழுச்சியும் வளர்ச்சியும்



சதுரங்கம் (வல்லாட்டம்) இந்தியாவில் தோன்றிய பாரம்பரிய அறிவுசார் விளையாட்டாகும். தமிழர்கள் இவ்விளையாட்டில் தொன்றுதொட்டு ஆர்வமும் திறமையும் வெளிப்படுத்தி வருகின்றனர். உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்களை சதுரங்கத்தின் ஊடாக ஒன்றிணைத்து, இளம் தலைமுறையினரிடையே அறிவாற்றல், ஒழுக்கம் மற்றும் போட்டித் திறனை வளர்க்கும் உயரிய நோக்கத்துடன் உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை (World Tamil Chess Federation – WTCF) நிறுவப்பட்டது.

அமைப்பின் உருவாக்கமும் வளர்ச்சியும்

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை (WTCF), அதன் ஸ்தாபகர் திரு. கந்தையா சிங்கம் அவர்களின் நீண்டகால முயற்சியின் பலனாக 05.10.2019 அன்று பிரித்தானியாவை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

அமைப்பு உருவானதன் பின்னர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ்ச் சதுரங்க ஆர்வலர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, திரு. ரகுராஜ் தர்மரட்ணம் அவர்களின் தலைமையில் நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. தற்போது மத்திய செயற்குழுவில் 11 உறுப்பினர்கள் இணைந்து அமைப்பின் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

WTCF ஒரு லாப நோக்கமற்ற சர்வதேச அமைப்பாக இயங்கி வருகிறது. சதுரங்கத்தின் மூலம் உலகத் தமிழர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவதும், தமிழர் சமூகத்தின் கல்வி மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கு பங்களிப்பதும் இதன் பிரதான நோக்கமாகும்.

முக்கிய நோக்கங்கள்

- உலகத் தமிழர்களை சதுரங்கத்தின் மூலம் ஒன்றிணைத்தல்.
- தமிழ் மாணவர்களிடையே சதுரங்கத்தின் மீதான ஆர்வத்தை வளர்த்தல்.
- சதுரங்க வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்களை இணைத்து, அவர்கள் வாழும் நாடுகளில் சதுரங்க வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் தேசிய சதுரங்கச் சங்கங்களில் உறுப்பினர்களாக இணைவதற்கு வழிவகை செய்தல்.
- உலகத் தரத்தில் போட்டியிடக்கூடிய இளம் வீரர்களை உருவாக்குதல்.
- பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- சர்வதேச தரத்தில் சதுரங்கப் போட்டிகளை ஒழுங்குபடுத்துதல்.
- திறமையான வீரர்களைத் தேர்ந்தெடுத்து சிறப்பு பயிற்சிகளை வழங்குதல்.
- போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு மனஅமைதியையும் நம்பிக்கையையும் வழங்கும் கருவியாக சதுரங்கத்தை அறிமுகப்படுத்துதல்.
- பொருளாதார வசதியின்றியும் திறமையுடன் விளங்கும் மாணவர்களுக்கு தேவையான உதவிகளையும் ஊக்கத்தொகைகளையும் வழங்குதல்.

இணையவழிச் சர்வதேச போட்டிகள்

COVID-19 பெருந்தொற்று காலத்தில், 13.09.2020 அன்று WTCF தனது முதல் சர்வதேச இணையவழிச் சதுரங்கப் போட்டியை வெற்றிகரமாக நடத்தியது. இதில் 21 நாடுகளைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மொத்தம் 345 அமெரிக்க டாலர் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற முக்கிய இணையவழிப் போட்டிகள்:

- 13.09.2020 – அனுசரணை: Sugun (UK), Learn2Drive (Norway), Engel Paradis (Norway)
- 20.12.2020 – அனுசரணை: நோர்வே தமிழ்ச் சங்கம்
- 28.03.2021 – அனுசரணை: அமரர் கு.ப. இரக்சகபாலன் குடும்பம்
- 24.10.2021 – அனுசரணை: WTCF
- 22 & 29.01.2023 – Gold & Silver Tournament – அனுசரணை: அமரர் கு.ப. இரக்சகபாலன் குடும்பம்

WTCF London Rapid Open

2022 ஆம் ஆண்டு முதல் WTCF ஆண்டுதோறும் London Rapid Open சதுரங்கப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

- 21.05.2023 – அனுசரணை: Lotus Caring Hands, Embon, Ellalan
- 24.03.2024 – அனுசரணை: Lotus Caring Hands, FCBC, VTS, EDUCO UK
- 23.03.2025 – அனுசரணை: Lotus Caring Hands, FCBC, Spot On Money
- 21.06.2026 – அனுசரணை: FCBC

இந்தப் போட்டிகளில் தமிழர்கள் மட்டுமன்றி பல்வேறு இனங்களைச் சேர்ந்த வீரர்களும் ஆர்வமுடன் பங்கேற்று வெற்றி பெற்றிருப்பது WTCF-இன் சர்வதேச அங்கீகாரத்தை வெளிப்படுத்துகிறது.

இலங்கையில் WTCF-இன் செயற்பாடுகள்

WTCF இலங்கையிலும் நேரடி மற்றும் இணையவழிச் சதுரங்கப் போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

WTCF Ceylon Rapid Chess Open

1. 05.02.2022 – வேந்தன் கலைக் கல்லூரி, யாழ்ப்பாணம்
2. 25–26.03.2023 – கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
3. 15.06.2024 – MAS Kreeda – Vaanavil, கிளிநொச்சி
4. 19.07.2025 – கந்தசாமி மண்டபம், வவுனியா
5. 22.08.2026 – நகரசபை மண்டபம், திருகோணமலை

இணையவழி சிறப்புப் பயிற்சி முகாம்

2025 ஆம் ஆண்டு மே மாதம் முதல், Northern UNI மற்றும் இந்தியாவின் அனுபவமிக்க சதுரங்கப் பயிற்சியாளர் ஒருவரின் வழிகாட்டுதலுடன், இலங்கை மாணவர்களுக்காக இணையவழி சிறப்புப் பயிற்சி முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி திறமையான இளம் வீரர்களை சர்வதேச தரத்திற்கு உருவாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுகிறது. மேலும் இவ்வாண்டு (2026) உயர் தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கில் 1700 க்கு மேற்பட்ட FIDE தரப்படுத்தலைக் கொண்ட வீரர்களுக்கான சிறப்புப் பயிற்சி FM ஒருவரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஊடகங்கள் மற்றும் செயற்பாட்டு முறைகள்

WTCF தனது பணிகளை இணையதளம், சமூக ஊடகங்கள், நேரடி பயிற்சிகள், இணையவழி வகுப்புகள் மற்றும் சர்வதேச சதுரங்கப் போட்டிகள் ஆகியவற்றின் மூலம் உலகம் முழுவதும் கொண்டு செல்கிறது. சதுரங்கத்தின் மூலம் தமிழர் சமூகத்தின் அறிவாற்றல், ஒற்றுமை மற்றும் உலகளாவிய பங்களிப்பை வலுப்படுத்துவதில் WTCF குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறது.

நிறைவுரை

இன்று உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை (WTCF), சதுரங்க அமைப்பாக மட்டுமல்லாது, தமிழரின் அறிவு, ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாக உலக அரங்கில் திகழ்கிறது. உலகெங்கிலும் வாழும் தமிழர்களை ஒரே மேடையில் இணைத்து, வருங்கால தலைமுறையை உலகத் தரத்திலான சதுரங்க வீரர்களாக உருவாக்கும் உயரிய பணியில் WTCF தொடர்ந்து முன்னேறி வருகிறது. இந்தப் பயணம், தமிழரின் அறிவாற்றலையும் சுயமரியாதையையும் உலக அரங்கில் மேலும் உயர்த்தும் ஒரு சிறப்பான வரலாற்றுப் பயணமாகும்.

- WTCF



WTCF CEYLON RAPID OPEN 2025 VAVUNIYA PHOTOS















2026 WTCF
LONDON OPEN PHOTOS











வல்லாட்டம் வளர்க்கும் திறன்கள் மற்றும் அதன் சிறப்புகள்



வல்லாட்டம் என்பது ஒரு சாதாரண விளையாட்டு அல்ல, அது மனிதனின் பல்வேறு அறிவாற்றல்களையும் மனத்திறன்களையும் மேம்படுத்தும் ஒரு அற்புதமான பயிற்சி ஆகும். இந்த விளையாட்டின் மூலம் உருவாகும் சில முக்கிய திறன்கள் பின்வருமாறு:

- தன்னம்பிக்கை (Self Confidence)
- ஞாபக சக்தி (Memory)
- வேகம் (Speed)
- கவனித்தல் (Observation)
- துல்லியம் (Accuracy)
- ஆய்வு / பகுப்பாய்வு (Analysis)
- ஆக்கத்திறன் (Creativity)
- முடிவெடுக்கும் திறன் (Decision Making)
- தெளிவாகப் புரிதல் (Understanding)
- சிந்தனை ஒருமுகப்படுத்துதல் (Concentration)

இந்த திறன்கள் அனைத்தும் ஒருவரின் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் அடிப்படையாக அமைகின்றன.

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை நடாத்தும்

5வது வடக்கு-கிழக்கு மாகாண ரீதியிலான வல்லாட்டப் போட்டி (சதுரங்கம்) - திருகோணமலை

5th WTCF CEYLON RAPID CHESS OPEN 2026
TRINCOMALEE



திகதி: 22.08.2026 (சனிக்கிழமை)

நேரம்: காலை 8.30 மணி – மாலை 5.30 மணி

இடம்: திருகோணமலை உள்ளக விளையாட்டரங்கு (Trincomalee Indoor Stadium)

போட்டி முறை

- 7 **சுற்றுகள்** (Swiss System)
- **நேரக் கட்டுப்பாடு:** 15 நிமிடங்கள் + ஒவ்வொரு நகர்விற்கும் 5 விநாடிகள் (15+5)



விண்ணப்ப விபரங்கள்

விண்ணப்ப முடிவுத் திகதி: 08.08.2026
போட்டிக் கட்டணம்: ரூ. 1,500/-
பிந்திய விண்ணப்பங்கள்:
09.08.2026 முதல் 15.08.2026 வரை பெறப்படும் விண்ணப்பங்களுக்கு ரூ.400/- மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

கட்டணம் செலுத்தும் முறை

போட்டிக் கட்டணத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் செலுத்தி, வைப்புச் சீட்டினை google form ல் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.

வங்கிக் கணக்கு விபரங்கள்:

Subramaniyam Nirojan
8000748328
Commercial Bank
கட்டணம்: ரூ.1,500 /-
BCR 14Z

பரிசுப் பிரிவுகள்
Price category

- Under 09
- Under 11
- Under 13
- Under 15
- Open

மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீரர்கள்

திருகோணமலை	70
அம்பாறை	35
வவுனியா	35
யாழ்ப்பாணம்	35
கிளிநொச்சி	35
மட்டக்களப்பு	30
மன்னார்	20
முல்லைத்தீவு	35
ஏனைய பகுதிகள்	10

மொத்தம்: 300 போட்டியாளர்கள்

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

மாவட்டம்	ஒருங்கிணைப்பாளர் / தொலைபேசி
திருகோணமலை :	Mr. Harishanth, 075 583 7020
வவுனியா :	Mr. Subhananthan, 077 363 2737
யாழ்ப்பாணம் :	Mr. Nanthan, 077 388 0590
கிளிநொச்சி :	Mr. Sivaruban, 077 699 1078
மன்னார் :	Mr. Jeramy, 076 653 1067
முல்லைத்தீவு :	Mr. Sujanthan, 077 324 5738
மட்டக்களப்பு :	Mr. Parathipan, 077 434 3256
அம்பாறை :	Mr. Shakeer, 075 248 2723

QRஐ Scan செய்து விண்ணப்பிக்கவும்

CLICK HERE

https://forms.gle/pBP-PqQQRLY4o2H3H7

விண்ணப்பம் சார்ந்த தொடர்புக்கு
(Whatapp) 076 782 41 39 / 076 888 6068

திறந்த போட்டிகளுக்கான OPEN (CATEGORY)

பரிசுத்தொகை 1ஆவது இடம் முதல் 10ஆம் இடம்வரை வழங்கப்படும்



1 ஆவது இடம்: ரூ.15,000
2 ஆவது இடம்: ரூ.13,000
3 ஆவது இடம்: ரூ.10,000

மேலும் 10வரையிலான இடங்களைப் பெறுபவர்களுக்கும் வழங்கப்படும்

போட்டி விதிமுறைகள்

- போட்டி 7 சுற்றுகள் (Rapid – Swiss System) முறையில் நடைபெறும்.
- நேரக் கட்டுப்பாடு: 15 நிமிடங்கள் + ஒவ்வொரு நகர்விற்கும் 5 விநாடிகள்.
- அனைத்து போட்டிகளும் சர்வதேச சதுரங்கச் சம்மேளன (FIDE) விதிமுறைகளின்படி நடத்தப்படும்.
- FIDE தரவரிசை (Rating) பெற்ற வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மொத்தம் 300 போட்டியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- போட்டி ஒழுங்கமைப்புக் குழுவிற்கு விதிமுறைகளைத் திருத்தும் அல்லது மாற்றும் உரிமை உண்டு.
- நடுவரின் தீர்ப்பே இறுதியானதாகும்.
- அனைத்து போட்டியாளர்களுக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- அனைத்து பிரிவுகளிலும் வெற்றியாளர்களுக்கு வெற்றிக் கோப்பைகள் வழங்கப்படும்.
- போட்டி நாளில் போட்டியாளர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழை கட்டாயமாக கொண்டு வர வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

திரு. மயூரன்
திருகோணமலை
+94 77 196 3313

தங்குமிட வசதி
ஜோசப் டிலுக்ஷன்
+94 76 867 5423

miwayz
Go Beyond the Usual!

web: www.worldtamilchess.com
email: admin@worldtamilchess.com

miwayz

Go Beyond the Usual!

Lanka's New Ride-Hailing Experience is Almost Here!



50% OFF ON YOUR RIDES*

INSTALL THE MIWAYZ APP NOW

Download on the App Store

GET IT ON Google Play